72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 30 June 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at’ ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk Twitter: @raviranneliya


# ஜனா. ரணில் விக்ரமசிங்க மற்றும் எஸ்.எல்.பி.பி.க்கு மே மாதத்திலும் ஆதரவு தொடர்ந்து கூடியது

## *IHP மே 2023 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

IHPன் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மான MRP தொடரியின் மே மாத கருத்துக்கணிப்பின்படி, என்.பி.பி./ஜே.வி.பி. யின் தலைவர் அ கு திஸ்ஸநாயக மற்றும் எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாச, இவர்களின் ஆதரவு வாக்களிக்கக்கூடியவர்கள் இடையே முறையே 38% மற்றும் 34% ற்கு விழுந்தது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் யாராகிலும் ஒரு எஸ்.எல்.பி.பி. வேட்பாளருக்கும் இந்த ஆதரவு சென்றதன் காரணமாக இவர்களுக்கான ஆதரவு முறையே 18% மற்றும் 10%ற்கு அதிகரித்தது. மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1–4%.




மே மாத மாற்றங்கள், 2022 மத்தியில் இருந்து காணப்படும் அதேமாதிரியான போக்குககளைக் காட்டுகின்றது. 2022 மத்தியில் ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷவின் ஆதரவு உடைந்ததால் என்.பி.பி./ஜே.வி.பி. யின் தலைவர் அ கு திஸ்ஸநாயக பெருமளவு பயணடைந்தார். ஒரு பக்கம் அ கு திஸ்ஸநாயக மற்றொரு பக்கம் ரணில் விக்ரமசிங்க மற்றும் எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் என்று இவர்களுக்கிடையே ஆதரவு ஊசலாட, சஜித் பிரேமதாசவிற்கான ஆதரவு 30-40% இடையே தளம்புகின்றது.




## தொடர்புடைய அறிக்கைகள்

Institute for Health Policy, February 2023, “IHP MRP Voting Intentions Update February 2023: Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead”, SLOTS Report #2023-06
Available at: https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf

Institute for Health Policy, April 2023, “IHP Presidential Election Voting Intentions Update March 2023: AK Dissanayake (48%) leads Sajith Premadasa (37%) in Presidential Election voter preferences”.
Available at: *https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202309.pdf*

Institute for Health Policy, May 2023, “Support for AK Dissanayake slips to 45%, but still leads Sajith Premadasa (37%). IHP MRP Presidential Election voting intentions update April 2023”, IHP Press Release #2023-16.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230526.pdf*

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஓர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிட, multiple imputation என்னும் தரவு கணிப்புமுறையை பயன்படுத்துவதோடு, குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது. இம்பியூடேஷன் (Imputation) என்பது தவறிய, தவறான அல்லது சீரற்ற தரவுகளுக்கு மாற்று மதிப்புகளை ஒதுக்கப் பயன்படும் செயல்முறையாகும்.

2023 மே மாததிற்கான MRP மதிப்பீடுகள் மே 2023 ல் நடத்தப்பட்ட 630 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021 - ஜூன் 19 2023 வரை நடத்தப்பட்ட 11,897 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அ. கு. திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு 2 – 4% என்றும் மற்ற இரண்டு உத்தேச வேட்பாளர்களுக்கும் 1–3% என்றும் பிழை விளிம்பு மதிப்பிடப்பட்டது.

தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம் (The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.